MAHA VIMOCHANA TRUST

பொருள் அடக்கம்

2 களப்பணி

8 மருத்துவமுகாம்

6 சிலம்பம்

7 கணினிபயிற்சி மையம்

8 விளையாட்டு

9 இலவச இரவு பாடசாலை

10 யோகா

11 கோடை கால பயிற்சிகள்

12 பேச்சு ஆங்கிலம்

களப்பணி

செம்மஞ்சேரி

செம்மஞ்சேரியில் இயங்கி வரும் கணினி பயிற்சிமையத்திற்கு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக இடம்வேண்டுதல் தொடர்பாக அலுவலகத்தை அணுகி கடிதம் வழங்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் அப்பகுதியில் நடைபெறும் அனைத்துவிளையாட்டு சார்ந்த நிகழ்ச்சிகளும் இதர திறன் பயிற்சிகளும் முறையாக அனுமதி பெறுவது சம்பந்தமாக “ரிப்பன்” மாளிகையில் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. அப்பகுதியில் களப்பணி மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. செம்மஞ்சேரியில் திருமதி தமிழரசி அவர்கள் சிறப்பாக களப்பணி ஆற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது

.

பெரும்பாக்கம்

பெரும்பாக்கம்பகுதியில் திருமதி ராஜலட்சுமி திருமதி பவானி திருமதி துர்காமற்றும் திரு.வேலு ஆகியோர் சிறப்பாக களப்பணி ஆற்றி வருகிறார்கள். அவர்கள் அறக்கட்டளையின் சார்பில் பெரும்பாக்கம் பகுதியில் செவிலியர் படிப்பினைபற்றி எடுத்துரைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தி அதற்காக ஒரு ஆலோசனைகூட்டம் நடத்தினர். அது மட்டும் இல்லாமல் மகளிர் அணி உருவாக்குவது குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது .

இம்மாதம் பதினாறாம் தேதி அறக்கட்டளையின் அலுவலகத்தில் இளைஞர்கள் கூட்டம் நடைபெற்றது அதில் நமது செயல் திட்டங்கள் மற்றும் இப்பகுதியின் வளர்ச்சி குறித்து கலந்துரையாடப்பட்டது. MSW மாணவர்கள் நமது அறக்கட்டளையின் நலத்திட்டங்களை குறித்து கேட்டு தெரிந்து கொண்டனர். மேலும் பல MSW மாணவர்கள் நமது அறக்கட்டளையின் செயல் திட்டங்களை புரிந்து கொண்டனர்.

சமுதாய வளர்ச்சி பிரிவு அலுவலர் திருமதி தமிழ் அரசி அவர்கள் நமது அறக்கட்டளையை மேற்பார்வையிட்டனர். நமது அறக்கட்டளையின் சார்பில் இந்தியன் வங்கியில் 0 பேலன்ஸ் அக்கௌன்ட் ஓப்பன் திறக்கப்பட்டது .

DICCI அலுவலர் திருமதி .பாக்கியலட்சுமி அவர்களை நேரில் சந்தித்து பெரும்பாக்கத்தின் வளர்ச்சி குறித்து கலந்துரையாடப்பட்டது. DICCI அலுவலர், எஸ் சி, எஸ் டி மற்றும் எம் பி சி ஆகிய பிரிவினருக்கு லோன் மற்றும் தொழில் தொடங்குதல், ,தொழில் திறன் பயிற்சி முதலியவற்றை ஏற்படுத்தி தருவதாக உறுதி அளித்துள்ளனர் .மே மாதம் நமது அறக்கட்டளை HCL நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு கால்பந்தாட்டம் மற்றும் ஆங்கில பயிற்சி ஆகியவற்றை இணைந்து செயல்பட்டது.இதன்மூலம் மாணவர்கள் பயன் பெற்றனர்.கோடை கால பயிற்சிகள் பெரும்பாக்கத்தில் சிறப்பாக நடந்து முடிந்தது

கண்ணகிநகர்

கண்ணகிநகரில் இளைஞர் மன்றம்உருவாகுவது தொடர்பாக, அடையாறில் இயங்கி வரும் நேருயுகேந்திராவை நேரில் சந்தித்து விளையாட்டு வீரர்களின் பெயர்களை சமர்ப்பித்தனர் . கண்ணகி நகரில் இயங்கிவரும் கணினி மையத்திற்கு இடம் வேண்டுதல் தொடர்பாக சமுதாய வளர்ச்சி அலுவலர் அவர்களை சந்தித்து கலந்துரையாடப்பட்டது. பத்தாவது தேர்ச்சி அடையாத மாணவர்களை சந்தித்து அவர்களுக்கு தேர்வுக்கு எப்படி தயார் ஆகுவது மற்றும் திட்டங்கள் ஆகியவற்றை எடுத்துக் கூறினர்.அறக்கட்டளையின் மூலமாக இயங்கிவரும் இரவு பாடசாலைமூலமாக மாணவர்கள் நல்ல மதிப்பெண்ணை பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பகுதியில் திரு சரவணன், திருமதி.திவ்யா மற்றும் திருமதி.லட்சுமி ஆகியோர் சிறப்பாக களப்பணி ஆற்றி வருகிறார்கள்.

பன்னிரண்டாம் வகுப்பு முடித்த மாணவ மாணவிகளுக்கு மேற்கொண்டு என்ன படிக்கவேண்டும் என்ற அறிவுரைவழங்கப்பட்டது. கண்ணகி நகரில் உள்ள எழில் நகரில் மகளிருக்கான ஒருங்கிணைப்புக்குழு நடைபெற்றது.

மருத்துவமுகாம்

செம்மஞ்சேரியில்மருத்துவ முகாம் சிறப்பாகசெயல்பட்டது இதன் மூலமாக 500க்கும் மேற்பட்ட பயனாளர்கள் பயனடைந்தார்கள்என்பது குறிப்பிடத்தக்கது. மருத்துவமுகாம், அறக்கட்டளைமற்றும் ஹிந்து மிஷன்ஹாஸ்பிடல் இணைந்து செயல்படுத்தி வருகிறது.

சிலம்பம்

சிலம்பம்,கண்ணகி நகர் செம்மஞ்சேரி, பெரும்பாக்கம், எழில் நகர் ஆகிய பகுதிகளில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு இடையே தேர்வுகள் நடக்க உள்ளது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கோப்பை வழங்கப்பட உள்ளது. மற்றும் முதலாவது பயிற்சியில் முடித்த மாணவர்களுக்கு சர்டிபிகேட் வழங்கப்பட உள்ளது.

கணினிபயிற்சி மையம்

கணினி பயிற்சி மையம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கோடைக்காலம் என்பதால் மாணவர்களின் வரவு சிலபகுதிகளில் அதிகரித்து உள்ளது. மாணவர்களுக்கு புதிய வகுப்புகள் எடுப்பதற்காக இணைய வழி மூலமாக மைக்ரோசாப்ட் பவர் பியை(Microsoft Power Bi) கேன்வா (Canva)ஆகியவை கற்றுத் தரப்பட்டது. இன்னும் புதிய பயிற்சிகள் கற்றுத்தர உள்ளது.

விளையாட்டு

செம்மஞ்சேரியில் மே 2 அன்று கால்பந்து போட்டி நடைபெற்றதுஅப்போட்டி பல தரப்பகுதியில் இருந்து கால்பந்து போட்டியாளர்களைவரவழை த்து போட்டி நடைபெற்றதுஅதில் செம்மஞ்சேரியை சார்ந்தகால்பந்தாட்ட குழு மூன்றாவதுஇடத்தை பிடித்தது

நமது மாணவர்கள் ராயப்பேட்டையில் உள்ள வெஸ்லி பள்ளியில் கால்பந்து ஆட்ட போட்டியில் கலந்து கொண்டனர்

அடையாற்றில் இயங்கி வரும் நேரு யுவகேந்திரா விளையாட்டு குழு மற்றும் மகளிர் குழு ஆகியவற்றை பெரும்பாக்கத்தில் துவங்குவதற்கான வழிமுறையை கேட்பதற்காக பெரும்பாக்கம் குழு அங்கு சென்று தெரிந்து கொண்டனர்.

பெரும்பாக்கத்தில் விளையாட்டு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அப்பகுதியின் நகர்புற வாழ்விட மேம்பாட்டு அதிகாரி திரு டார்வின் அவர்களின் தலைமையில் அனைத்து ngoவிடமும் கலந்துரையாடல் நடைபெற்றது நமது அறக்கட்டளையின் சார்பில் திருமதி பவானி மற்றும் திருமதி ராஜலட்சுமி கலந்துகொண்டு விளையாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.

சமுதாய வளர்ச்சி பிரிவு துறை நடத்தவிருக்கும் விளையாட்டுப் போட்டிக்கு நமது மாணவர்களின் சேர்க்கை நடைபெற்றது

இலவச இரவு பாடசாலை

இலவச இரவு பாடசாலையில் பத்தாம் வகுப்பிற்கான கணிதம் மற்றும் சில விளையாட்டுகள் நடைபெற்று வருகிறது. பள்ளிகள் துவங்கிய பிறகு வகுப்புகள் சீராக செயல்படும் என்பது குறிப்பிடத்தக்கது

யோகா

யோகா வகுப்புகள் ,கோடை விடுமுறை என்பதால் இம்மாதம் சிறப்பாக செயல்படவில்லை. வரும் ஜூன் மாதத்தில் இருந்து சிறப்பாக செயல்பட உள்ளது.

கோடை கால பயிற்சிகள்

பேச்சு ஆங்கிலம்

அறக்கட்டளை HCL நிறுவனத்தின் உதவியோடு பெரும்பாக்கத்தில் எடுத்து வருகிறது மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பயிற்சியில் பங்கு பெறுகிறார்கள் பயிற்சி மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது

MAY 2024



OVERALL PERFORMANCE